**ஜூன் – 13**

# TNPSC துளிகள்

- மத்திய மெட்ரோ இரயில் நிலையத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ‘சென்னை புத்தகப் பூங்காவை’ தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தேசிய e-Vidhan செயலி (NeVA) தளத்தினை ஏற்றுக் கொண்ட நாட்டின் 19வது சட்ட மன்றமாகப் புதுச்சேரி மாறியுள்ளது.
- உலகின் மிகப்பெரியதான கண்டெய்னர் கப்பலான MSC IRINA, சமீபத்தில் கேரளாவின் விழிஞ்சம் சர்வதேச துறைமுகத்தில் நிறுத்தப்பட்டது.
- நாட்டில் 24 மணி நேரமும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன்களை உறுதி செய்வதற்காக மணிக்கு 30 ஜிகாவாட் (GWh) அளவிலான உற்பத்தித் திறன் கொண்ட புதிய மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளை (BESS) உருவாக்குவதற்காக 5,400 கோடி ரூபாய் மதிப்பிலான சாத்தியக்கூறு இடைவெளி நிதியை (VGF) இந்திய அரசு அறிவித்து உள்ளது.
- மும்பையில் நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர், நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுச் சபையின் (FSDC) 29வது கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- இமயமலையில் மழைப்பொழிவால் ஏற்படும் நிலச்சரிவுகளுக்கான முன் எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய கட்டமைப்பை ரூர்க்கேயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையத்தின் (CoEDMM) ஆராய்ச்சியாளர்கள் அறிமுகப் படுத்தி உள்ளனர்.
- ஒரு பெருநகரத்தின் விளிம்போரப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான (80-85) சிவிங்கிப் புலிகள் சுதந்திரமாக வாழ்கின்ற பகுதி என்ற அடிப்படையில் மும்பையை விஞ்சி, பெங்களூரு நகரானது, அதிகாரப்பூர்வமாக இந்தியாவின் 'சிவிங்கிப் புலியின் தலைநகராக' மாறியுள்ளது.
- இஸ்ரேலிய நாட்டின் கடற்படையானது, மனிதாபிமான உதவிக்கான முக்கிய நுழைவு மையமாக இருக்கும் கப்பல் துறைகளைக் குறி வைத்து, ஏமன் துறைமுக நகரமான ஹோடைடாவின் மீது தனது முதல் நேரடி கடற்படைத் தாக்குதலை நடத்தியது.
- இரு நாடுகளுக்கும் இடையே முன்னர் கையெழுத்திடப்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் ஈரானில் எட்டு அணு மின் நிலையங்களை ரஷ்யா கட்டமைக்க உள்ளது.
- விமானப் போக்குவரத்து, கண்காணிப்புத் திரைகள் மற்றும் தொழில்துறை கட்டுப்பாட்டு அமைப்புகள் போன்ற முக்கியமான துறைகளில் பயன்படுத்துவதுடன், உலகளவில் முதன்முறையாக, சீனா பைனரி (இரும வரிசை) அல்லாத செயற்கை நுண்ணறிவு சில்லுகளை பெரிய அளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நிலையான மேம்பாட்டு இலக்கு செயல்திறனில் தமிழ்நாடு மற்றும் ஐரோப்பா

- ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதில் தமிழ்நாடு பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பின் சமீபத்திய அறிக்கையின்படி, இது தற்போது பல ஐரோப்பிய நாடுகளின் சராசரியை விட சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

- 2023–24 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் SDG குறியீட்டில், தமிழ்நாடு 78 புள்ளிகளைப் பெற்றது, இது 2018 ஆம் ஆண்டில் 66 ஆக இருந்தது.
- இதன் மூலம் மாநிலம் இந்திய அளவில் கேரளா மற்றும் உத்தரகாண்ட் ஆகிவற்றிற்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் உள்ளது.
- 17 SDG இலக்குகளுள் 13 இலக்குகளில் தமிழ்நாடு 'முன்னணி' அந்தஸ்தைப் பெற்றது.
- வறுமை மற்றும் பட்டினி நிலையை ஒழித்தல், நல்ல ஆரோக்கியம், தரமான கல்வி, தூய்மையான எரிசக்தி மற்றும் முறையான வேலைவாய்ப்புகள் போன்ற துறைகளில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- பருவநிலை மாற்றத்தினைக் கையாள்வதில் வலுவான முயற்சிகளை மேற்கொண்டு, பருவநிலை நடவடிக்கையிலும் இந்த மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- அதன் மதிப்பெண் ஆனது, சுமார் 72% ஆக உள்ள பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சராசரி SDG மதிப்பெண்ணை விட அதிகமாக உள்ளது.
- மாநில திட்டக் குழுவானது, நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் என்ற அறிக்கையினைச் சமீபத்தில் சமர்ப்பித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் தீவிர வறுமை நிலையை ஒழித்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களின் எண்ணிக்கையினைப் பூஜ்ஜியமாகக் குறைப்பதை இது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## MGNREGS செலவினத்திற்கான வரம்பு

- அரசாங்கமானது முதன்முறையாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் (MGNREGS) கீழ் அதன் செலவினங்களை அதன் வருடாந்திர ஒதுக்கீட்டில் 60 சதவீதமாகக் கட்டுப்படுத்தியுள்ளது.
- இதுவரை, கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆனது அத்தகைய செலவு

வரம்பு இல்லாமல் தேவை சார்ந்த ஒரு திட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

- தற்போது நிதி அமைச்சகம் ஆனது, MGNREGS திட்டத்தின் வருடாந்திரச் செலவினத்தில் நிதியாண்டின் முதல் பாதியில் 60 சதவீதம் வரையில் அதாவது 86,000 கோடி ரூபாய் செலவிட முடியும் என்று ஊரக மேம்பாட்டு அமைச்சகத்திடம் தெரிவித்துள்ளது.
- அதாவது செப்டம்பர் மாத இறுதி வரையில் இந்தத் திட்டத்திற்கு 51,600 கோடி ரூபாய் மட்டுமே கிடைக்கப்பெறும்.
- 2025–26 ஆம் ஆண்டிற்கு, கிராமப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகம் ஆனது, 198.86 கோடி மனித உழைப்பு நாட்கள் கொண்ட தொழிலாளர் ஒதுக்கீட்டினை அங்கீகரித்து உள்ளது.
- நிதியாண்டின் முதல் பாதியில் இதில் சுமார் 67.11 சதவீதம் அல்லது 133.45 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




## ICGEB ஆளுநர்களின் வாரியக் கூட்டம்




- "சர்வதேச மரபணுப் பொறியியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின்" (ICGEB) ஆளுநர்களின் வாரியக் கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் உலகின் சுமார் 60க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- இந்த நிகழ்வில், இந்தியாவின் முதல் அரசு/பொது நிதியுதவி பெற்ற அறிவியல் மற்றும்

தொழில்நுட்பத் துறையின் ICGEB ஆனது 'Bio-foundry' எனப்படுகின்ற ஒரு தானியக்க முறையிலான உயிரியல் நுட்பம் சார் உற்பத்தி அமைப்பு வெளியிடப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## தேசிய எல்லைகளுக்கு அப்பால் உள்ள கடல் ஒப்பந்தம் புதுப்பிப்பு


- பிரான்சில் உள்ள நைஸ் நகரில் இந்த வாரம் நடைபெறும் மாநாட்டிற்காக ஒரு சிறப்பு தேசிய எல்லைகளுக்கு அப்பால் உள்ள (உயர்) கடல் ஒப்பந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, இந்த மாநாட்டில் 18 ஒப்புதல்களைப் பெற்றது.
- இன்றுவரையில், இந்த ஒப்பந்தத்தினை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த நாடுகளின் மொத்த எண்ணிக்கை 49 ஆகும்.
- எதிர்காலத்தில் அதை அங்கீகரிப்பதற்கான அவற்றின் ஒரு நோக்கத்தைக் குறிக்கும் வகையில் கூடுதலாக 17 நாடுகளும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன என்ற ஒரு நிலையில் இதன் மூலம் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகளின் மொத்த எண்ணிக்கை 134 ஆக உயர்ந்துள்ளது.
- குறைந்தது 60 நாடுகள் இதனை அங்கீகரித்த 120 நாட்களுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும்.
- இந்தியா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தாலும், இன்னும் அதனை அங்கீகரிக்க வில்லை.
- இது அதிகாரப்பூர்வமாக தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கடல் சார் உயிரியல் பன்முகத் தன்மை (BBNJ) ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 30 சதவீதப் பெருங்கடல்கள் மற்றும் நிலங்களைப் பாதுகாக்க உலகளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட பல்லுயிர்ப் பெருக்க இலக்கை அடைவதற்கு இந்த ஒரு ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது என்ற வகையில் இது "30x30" என்றும் அழைக்கப் படுகிறது.




## ECCAS மற்றும் ருவாண்டா


- மத்திய ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகத்திலிருந்து (ECCAS) ருவாண்டா விலகுவதாக அறிவித்துள்ளது.

- நில நடுக்கோட்டு (ஈக்வடோரியல்) கினியாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் 11 உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவின் தலைமைப் பொறுப்பை ருவாண்டா ஏற்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- அதன் உறுப்பினர் நாடுகளிடையே பாதுகாப்பு மற்றும் பொருளாதார விவகாரங்கள் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை வளர்ப்பதற்காக 1980 ஆம் ஆண்டுகளில் ECCAS நிறுவப்பட்டது.
- இது ருவாண்டா மற்றும் காங்கோ ஜனநாயக குடியரசு (DRC) உட்பட 11 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.
- கிழக்கு காங்கோவின் முக்கிய நகரங்களைக் கைப்பற்றிய M23 கிளர்ச்சி அமைப்பிற்கு இராணுவ ஆதரவை வழங்கியதாக ருவாண்டா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியக் காட்டு எருதுகளின் முதல் குரோமோசோம் நிலையிலான மரபணு





- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) நான்கு நிறுவனங்களின் வல்லுநர்கள்

இந்தியக் காட்டு எருதுகளின் (கவரிமா) முதல் குரோமோசோம் நிலையிலான அதன் மரபணுவைச் சேகரித்துள்ளனர்.

- இந்தியக் காட்டு எருதுகள் (பாஸ் க்ருன்னியன்ஸ்) பெரும்பாலும் 'இமயமலையின் கப்பல்' என்று அழைக்கப்படுகிறது.
- இந்த பசு வகை விலங்கு அதன் தகவமைப்பு மற்றும் தீவிர நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் ஒரு தன்மைக்காக நீண்ட காலமாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.
- இந்தியாவில், இந்தியக் காட்டு எருதுகள் லடாக், சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தில் சுமார் 7,000 அடிக்கு உயரமான பகுதிகளில் காணப் படுகின்றன.

## இருபரிமாண உலோகப் படலங்கள்

- சீனாவில் உள்ள அறிவியலாளர்கள் ஒரு புதிய உயர் அழுத்த நுட்பத்தைப் பயன்படுத்தி பிஸ்மத், காலியம், தகரம் மற்றும் ஈயம் ஆகியவற்றின் அணு அளவில் மெல்லிய இரு பரிமாண உலோகப் படலங்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- இருபரிமாண உலோகங்கள் என்பவை உலோக அணுக்களின் மிகவும் மெல்லியதான அடுக்குகள் என்பதோடு அவை பொதுவாக 1-2 அணுக்கள் அளவில் மட்டுமே தடிமன் கொண்டவை.
- இந்தக் குழுவின் கூற்றுப்படி, பிஸ்மத் தாள்/படலம் 6.3 Å தடிமன் மட்டுமே கொண்டது.
- வலுவான புல விளைவு மற்றும் நேரியல் அல்லாத ஹால் விளைவு ஆகிய இரண்டும் எந்த ஒரு முப்பரிமாண உலோகங்களிலும் அல்லாமல் இருபரிமாண உலோகங்களில் மட்டும் நிகழ்கின்றன.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீண்ட வால் கொண்ட இமயமலை வெளவால்

- உத்தரகாண்ட்டின் உயரமான சில பகுதிகளில் உள்ள காடுகளில் நீண்ட வால் கொண்ட இமயமலை வெளவால் (மையோடிஸ் ஹிமாலைகஸ்) எனப்படும் ஒரு புதிய வெளவால் இனம் ஆனது கண்டறியப்பட்டுள்ளது.
- இது தெற்கு இமயமலையின் மலைச் சரிவுகளில் மட்டுமே காணப்படுவதாக நம்பப் படுகிறது.
- புதிதாக விவரிக்கப்பட்ட இந்த இனம் ஆனது மியோடிஸ் பிரேட்டர் என்ற குழுவினைச்


சேர்ந்தது.

❖ இது கிழக்கு சீனா, தைவான், சைபீரியா, கொரியா, ஜப்பான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய பகுதிகளில் பரவிக் காணப்படும் உருவவியல் ரீதியாக ஒத்த இனங்களின் ஒரு குழுவாகும்.




# மாநிலச் செய்திகள்

## பழங்குடியின குடிமக்களுக்கான ஆயுத உரிமத் திட்டம்




❖ வங்காளதேச எல்லைக்கு அருகிலுள்ள "எளிதில் பாதிக்கப்படக் கூடிய மற்றும் தொலை தூர" பகுதிகளில் வாழும் "அந்தப் பகுதியில் வாழும் அசல் குடியிருப்பாளர்கள் மற்றும் பழங்குடியினச் சமூகங்களுக்கு" ஆயுத உரிமங்களை வழங்கும் திட்டத்தை அசாம் அமைச்சரவை அங்கீகரித்தது.

- இந்தப் புதிய ஆயுத உரிமக் கொள்கை ஆனது அருணாச்சலப் பிரதேசம், மேகாலயா, மிசோரம் மற்றும் நாகாலாந்து எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளுக்குப் பொருந்தாது.
- இவை வரலாற்று ரீதியாக அசாமுடன் நில எல்லைத் தகராறுகளில் சிக்கியிருந்தாலும், தேசிய பாதுகாப்பின் அடிப்படையில் எளிதில் பாதிக்கப்படக் கூடிய பகுதியாக கருதப் பட வில்லை.

## பஞ்சாப் பருத்தி சாகுபடி

- பஞ்சாபில், பருத்தி சாகுபடியில் சுமார் 20% அதிகரிப்பு பதிவானதன் மூலம் பயிர்களின் பல்வகைப்படுத்தல் முயற்சிகள் பெரும் ஊக்கத்தை அளித்துள்ளன.
- கடந்த ஆண்டு சுமார் 2.49 லட்சம் ஏக்கர்களாக இருந்த பருத்தி சாகுபடியின் மொத்தப் பரப்பளவானது 2025 ஆம் ஆண்டில் 2.98 லட்சம் ஏக்கர்களாக அதிகரித்துள்ளது.
- இது ஓராண்டிற்குள் 49,000 ஏக்கருக்கும் அதிகமான அதிகரிப்பைக் காட்டுகிறது.
- இந்த மாநிலத்தில் பருத்தி சாகுபடியில் முன்னணியில் உள்ள நான்கு மாவட்டங்கள் முறையே ஃபாசில்கா, மான்சா, பதிண்டா மற்றும் ஸ்ரீ முக்த்சர் சாஹிப் ஆகும்.
- பஞ்சாப் மாநில அரசானது விவசாயிகளுக்கு பருத்தி விதைகளை வாங்க சுமார் 33% என்ற அளவிற்கு மானியம் வழங்க முடிவு செய்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★